# சிறுவர் [illegible]ருமறைச் சுருக்கம்

அ.சர்மிஜா

அ.சர்மிஜா



மறைக்கல்வி நடு நிலையம், யாழ்ப்பாணம்.

2016

# முன்னுரை

அன்பார்ந்த பிள்ளைகளே!

நமது பரலோக தந்தையாகிய கடவுள் உங்களை அளவற்ற விதமாக அன்பு செய்கிறார். தமது ஒரே மகனாகிய கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பி அந்த அன்பை எமக்குக் காட்டினார். இயேசுக் கிறிஸ்து மனிதனாய்ப் பிறந்த அன்புக் கடவுள். அவர் சிறுபிள்ளைகளை மிகவும் அன்பு செய்கிறார். அவர் இவ்வுலகில் இருந்த காலத்தில் "சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்" என்று கூறினார். தம்மை எமக்கு ஆன்ம உணவாகவும் அளித்திருக்கிறார். இவ்வாறு உங்களை அன்பு செய்யும் இயேசுவை நீங்கள் அன்பு செய்ய வேண்டாமா? அவரை அறிந்து அன்பு செய்யவும், ஆன்ம உணவாகப் பெற்றுக்கொள்ள ஆயத்தம் செய்யவும் "சிறுவர் திருமறைச் சுருக்கம்" என்னும் இச்சிறுநூல் உங்களுக்கு உதவியாக இருக்கும்.

எனவே மிகுந்த ஆர்வத்தோடு படித்துப் பயனடைவீர்களென்று நம்புகின்றோம்.

**மறைக்கல்வி**
**நடுநிலையம்**
யாழ்ப்பாணம்

**Very Rev.Fr.P.Josephdas Jebaratnam**
Vicar General
Diocese of Jaffna
Bishop's House
Jaffna - Sri Lanka
01.03.2016

# பொது ஜெபங்கள்

## 1. சிலுவை அடையாளம்

தந்தை, மகன், தூயஆவியாரின் பெயராலே - ஆமென்.

## 2. இயேசு கிறிஸ்து கற்பித்த செபம்

பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே / உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராட்சியம் வருக. உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல, பூலோகத்திலும் செய்யப்படுவதாக. எங்கள் அனுதின உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும் / எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பது போல, எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும். / எங்களைச் சோதனையில் விழவிடாதேயும். / தீமையிலிருந்து எங்களை இரட்சித்தருளும். - ஆமென்.

## 3. மங்கள வார்த்தைச் செபம்

அருள் நிறைந்த மரியே வாழ்க! / கர்த்தர் உம்முடனே / பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே / உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

அர்ச்சியசிஷ்ட மரியாயே, சர்வேசுவரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக / இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும். - ஆமென்.

## 4. திரித்துவப் புகழ்

தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவியாருக்கும் மகிமை உண்டாவதாக ஆதியிலே இருந்தது போல இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றும் இருப்பதாக. - ஆமென்.

## 5. விசுவாசப் பிரமாணம்

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனை விசுவசிக்கிறேன். அவருடைய ஏகசுதனாகிய நம்முடையநாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவசிக்கிறேன். இவர் தூய ஆவியாரால் கர்ப்பமாய் உற்பவித்து தூய கன்னிமரியிடமிருந்து பிறந்தார். போஞ்சியோ பிலாத்துவின் அதிகாரத்தில் பாடுபட்டு சிலுவையில் அறையுண்டு மரித்து அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்த்தெழுந்தார். பரலோகத்திற்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனுடைய வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்தில் இருந்து சீவியரையும் மரித்தவரையும் நடுத்தீர்க்க வருவார். தூய ஆவியாரையும் விசுவசிக்கிறேன். தூய கத்தோலிக்க திருச்சபையை விசுவசிக்கிறேன். புனிதர்களின் சமூக உறவை விசுவசிக்கிறேன். பாவப் பொறுத்தலை விசுவசிக்கிறேன், சரீர உத்தானத்தை விசுவசிக்கிறேன். நித்திய சீவியத்தை விசுவசிக்கிறேன். - ஆமென்.

## 6. பாவசங்கீர்த்தன செபம்.

எல்லாம் வல்ல இறைவனிடமும் / சகோதரரே உங்களிடமும் / நான் பாவியென்று ஏற்றுக்கொள்கிறேன். ஏனெனில், என் சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும், கடமையில் தவறியதாலும் பாவங்கள் பல செய்தேன். / என்பாவமே, என்பாவமே, என்பெரும்பாவமே. ஆகையால் எப்பொழுதும் கன்னியான பரிசுத்த மரியாயையும், வானதூதர், புனிதர் அனைவரையும்,/ சகோதரரே உங்களையும், நம் இறைவனாகிய ஆண்டவரிடம் எனக்காக வேண்டிக்கொள்ள மன்றாடுகிறேன்.

## 7. உத்தம மனஸ்தாபச் செபம்.

என் ஆண்டவரே / அளவில்லாத நேசத்துக்குப் பாத்திரமாயிருக்கிற தேவரீருக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்தபடியினாலே / முழுமனதுடனே துக்கப்படுகிறேன்./ இனிமேல் சுவாமி, / தேவரீருடைய உதவியினாலே,/ நான் ஒருபோதும் பாவம் செய்யமாட்டேன் என்றும், / பாவங்களுக்கடுத்த காரணங்களை எல்லாம் விட்டுவிடுவேன் என்றும், / கெட்டிமனதுடனே வாக்குப் பண்ணுகிறேன்,/ எங்கள் நாயகன் இயேசு கிறிஸ்து பாடுபட்டு அடைந்த மட்டில்லாத பெறுபேறுகளைப் பார்த்து, / என் பாவங்களை எல்லாம் பொறுத்தருளும் சுவாமி - ஆமென்.

## 8. தூய ஆவியாரின் செபம் (சுருக்கமானது)

தூய ஆவியாரே, தேவரீர் எழுந்தருளி வாரும் / உமது விசுவாசிகளின் இருதயங்களை நிரப்பி / உமது நேசத்தின் அக்கினியை அவர்களிடத்தில் பற்றி எரியச் செய்தருளும். ஆண்டவரே, உமது தூய ஆவியாரை எங்களிடத்தில் அனுப்பியருளும். / அப்போது எங்கள் இருதயங்கள் புதுப்பிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபிப்போமாக

தூய ஆவியாரின் பிரகாசத்தினால் விசுவாசிகளின் இருதயங்களைப் படிப்பித்தருளிய இறைவா / நாங்களும் அதே தூய ஆவியாரின் வரத்தினால் நல்லவைகளை விரும்பவும், அவருடைய ஆறுதலை எப்போதும் பெற்று அக்களிக்கவும் பண்ணியருளும். இந்த மன்றாட்டை எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து நாதர் மூலமாக ஏற்றுத் தந்தருளும். ஆமென்.

## 9. காலைச் செபம்

எல்லாம் வல்ல இறைவா, என் அன்புத் தந்தையே! எல்லாவற்றிக்கும் மேலாக உம்மீது நான் முழு அன்பு கொள்கிறேன். என் எண்ணங்கள், செயல்கள் அனைத்தையும் உமக்கு கையளிக்கிறேன். எனக்கு உமது ஆசியை இன்று அளிக்குமாறு வேண்டுகின்றேன். உம்மை நான் என்றும் அறியவும், உம்மீது அன்பு கொள்ளவும், உமக்குப் பணிபுரியவும், உம்மோடு விண்ணில் நான் என்றென்றும் இன்புற்றிருக்கவும் உதவி செய்தருளும். ஆமென்.

## 10. மாலைச் செபம்

எல்லாம் வல்ல இறைவா, என் அன்புத்தந்தையே! உமக்கு எதிராகக் குற்றஞ் செய்ததற்காக நான் உள்ளம் வருந்துகிறேன். ஏனெனில், நீர் நன்மை மிக்கவர். குற்றம் உமக்கு வருத்தத்தைத் தருகிறது. குற்றம் புரிய ஏதுவான சூழலை உமது உதவியால் விலக்குவேன் என உறுதி கூறுகிறேன். இன்று நீர் எனக்குச் செய்த நன்மைகளுக்காக நான் நன்றி நவில்கிறேன். இரவில் என்னைப்பாதுகாத்தருளுமாறு உம்மை வேண்டுகிறேன். ஆமென்.

## 11. மூவேளைச் செபம்

**ஆண்டவருடைய தூதர் மரியாளுக்கு தூதுரைத்தார்**

அவளும் தூய ஆவியாரால் கருத்தரித்தாள்.

- அருள் நிறை................

**"இதோ, ஆண்டவருடைய அடிமை."**

உமது வார்த்தையின்படி எனக்கு ஆகட்டும்.

- அருள் நிறை................

**வார்த்தை மனுவுருவானார்.**

நம்மிடையே குடிகொண்டார்.

- அருள் நிறை................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதியுள்ளவர்களாகும் படியாக.

இறைவனின் தூய அன்னையே எங்களுக்காக மன்றாடும்.

செபிப்போமாக

இறைவா! தேவதூதர் அறிவித்தபடியே உம்முடைய திருமகன் இயேசுகிறிஸ்து மனிதனானதை நாங்கள் அறிந்துள்ளோம். அவருடைய பாடுகளினாலும், சிலுவையினாலும் நாங்கள் அவருடைய உயிர்ப்பின் மேன்மையை அடையும் பொருட்டு எங்கள் உள்ளங்களில் உமது அருளைப் பொழிய வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய அதே இயேசு கிறிஸ்துவின் வழியாக மன்றாடுகின்றோம். - ஆமென்.

## 12. பாஸ்கா காலத்தில் மூவேளைச் செபம்

விண்ணக அரசியே மனங்களிகூரும்.

**அல்லேலூயா.**

ஏனெனில் இறைவனைக் கருத்தாங்க பேறுபெற்றீர்.

**அல்லேலூயா.**

தாம் சொன்னபடியே அவர் உயிர்த்தெழுந்தார்

**அல்லேலூயா.**

எங்களுக்காக இறைவனை மன்றாடும்.

**அல்லேலூயா.**

கன்னிமரியே! அகமகிழ்ந்து பூரிப்படைவீர்.

**அல்லேலூயா.**

ஏனெனில் ஆண்டவர் உண்மையாகவே உயிர்த்தெழுந்தார்.

**அல்லேலூயா.**

செபிப்போமாக

இறைவா! உம்முடைய திருமகனும் எங்கள் ஆண்டவருமாகிய .யேசு கிறிஸ்துவின் உயிர்ப்பினால் உலகம் மகிழ அருள்புரிந்தீரே! அவருடைய திருத்தாயாகிய கன்னிமரியாளின் துணையால் நாங்கள் என்றென்றும் நிலை வாழ்வின் பேரின்பத்தைப்பெற, அருள்புரியுமாறு எங்கள் ஆண்டவராகிய அதே இயேசு கிறிஸ்து வழியாக மன்றாடுகின்றோம்.


- ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் திருமறைச் சுருக்கம்

## 1-ம் பாடம்

## கடவுளின் படைப்புக்கள்



1. **அனைத்தையும் படைத்தவர் யார்?**
   கடவுள்

2. **கடவுள் படைத்தவைகளுள் சிறந்தவை யாவை?**
   வானதூதரும் மனிதரும்

3. **உலகம் எவ்வாறு உண்டாயிற்று?**
   உலகம் கடவுளால் உண்டாயிற்று. அவரே வானத்தையும் பூமியையும் படைத்தார்.

4. **கடவுள் உலகை எதற்காக படைத்தார்?**
   தம் ஞானமும் வல்லமையும் அன்பும் மகிமையும் விளங்க உலகைப் படைத்தார். மனிதனுக்குப் பயன்படும் வகையில் அதனை அமைத்தார். உலகை ஆண்டு நடத்த அவனுக்கு உரிமையளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2-ம் பாடம்

## கடவுள் படைத்த முதல் மனிதர்



**5. கடவுள் மனிதனை எவ்வாறு படைத்தார்?**

அறியவும் விரும்பவும் கூடிய ஆற்றலுடன் தம் சாயலாகப் படைத்தார்.

**6. கடவுள் மனிதனை எதற்காகப் படைத்தார்?**

தம்மை அறிந்து, தம்மீது அன்பு செலுத்தி தம்முடைய பேரின்பத்திலே பங்குகொள்ள வேண்டுமென்று மனிதனைப் படைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3-ம் பாடம்

# மனிதனின் வீழ்ச்சி



**07. இறைவனின் பேரின்பத்தில் பங்குகொள்ள கடவுள் மனிதனுக்கு அளித்த கொடை என்ன?**

அவனைத் தம் பிள்ளை என்ற நிலைக்கு உயர்த்தித் தம்மை "அப்பா" என்று அழைக்கும் உரிமையை அளித்தார். இதை அருள்நிலை என்கின்றோம்.

**08. மனிதன் அருள் நிலையை எவ்வாறு இழந்தான்?**

அலகையால் ஏமாற்றப்பட்டு கடவுளின் கட்டளையை மீறிப் பாவம் செய்ததால் அருள் நிலையை இழந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4-ம் பாடம்

## மீட்புக்கு ஆயத்தம்



**09. ஆதிப் பெற்றோரின் பாவத்தினால் மனுக்குலத்திற்கு வந்த தீமைகள் யாவை?**

கடவுளின் பிள்ளை என்ற நிலையை இழந்ததோடு பாவ நாட்டம், துன்பம், சாவு முதலிய இன்னல்களுக்கும், நரகத் தண்டனைக்கும் மனுக்குலம் உள்ளானது. இதைச் சென்ம பாவ நிலை என்கிறோம்.

**10. இந்தப் பாவநிலையிலேயே கடவுள் மனிதனை விட்டு விட்டாரா?**

இல்லை. அவனை மீட்க ஒரு மீட்பரை வாக்களித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5-ம் பாடம்

## இயேசுக்கிறிஸ்து



**11. ஆதியிலே கடவுள் வாக்களித்த மீட்பர் யார்?**
இயேசுக்கிறிஸ்து

**12. இயேசு எங்கே பிறந்தார்?**
பலஸ்தீன் நாட்டில் பெத்லெகேம் என்ற ஊரில் பிறந்தார்.

**13. இயேசுவின் தாயார் யார்?**
எப்பொழுதும் கன்னியான தூய மரியாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6-ம் பாடம்

# இயேசு எகிப்துக்குக் கொண்டு போகப்பட்டார்



**14. இயேசு ஏன் எகிப்துக்குக் கொண்டு போகப் பட்டார்?**

யூதேயாவின் அரசனான ஏரோது அவரைக் கொல்லத் தேடின படியால் அவர் எகிப்துக்குக் கொண்டு போகப் பட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7-ம் பாடம்

## மீட்புப்பணிக்கு ஆயத்தம்



**15. இயேசு எப்பொழுது தம் மீட்புப்பணியை வெளிப் படையாகத் தொடங்கினார்?**

முப்பது ஆண்டுகள் செபத்திலும் உழைப்பிலும் கழித்த பின் யோர்தான் ஆற்றில் திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்கு பெற்றுத் தம் மீட்புப்பணியை வெளிப் படையாகத் தொடங்கினார்.

**16. இயேசு திருமுழுக்கு பெற்றவுடன் என்ன நிகழ்ந்தது?**

வானம் திறக்க, கடவுளின் ஆவி புறாவைப்போல இயேசுவின் மேல் இறங்கி வந்தார். வானத்திலிருந்து "இவரே என் அன்பார்ந்த மகன்; இவரிடம் நான் பூரிப்படைகிறேன்" என்ற குரலொலி கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8-ம் பாடம்

# மூவொரு கடவுள்



**17. இயேசு திருமுழுக்கு பெற்ற நிகழ்ச்சியிலிருந்து நாம் என்ன அறிந்து கொள்ளுகிறோம்?**


இந்த நிகழ்ச்சியிலிருந்து கடவுள் ஒருவரேயாயினும் தந்தை, மகன், தூய ஆவியென மூவராயிருக்கிறார், என்று அறிந்து கொள்கிறோம், இந்த உண்மையைத் "திரித்துவம்" என்கிறோம்.

**18. இம்மூவரும் மூன்று கடவுளா, ஒரே கடவுளா?**

ஒரே கடவுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9-ம் பாடம்
## இயேசு போதித்தார்



**19. கடைசி மூன்று ஆண்டுகளிலும் இயேசு என்ன செய்தார்?**

இயேசு இறையாட்சி பற்றிய செய்தியைப் போதித்தார்.

**20. இயேசு மீட்புக்குத் துணையாக யாரைத் தேர்ந்து கொண்டார்?**

தம் சீடர்களுள் பன்னிருவரைத் தேர்ந்து கொண்டார். அவர்களுக்கு திருத்தூதர் என்று பெயரிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10-ம் பாடம்

# இயேசு கடவுளின் திருமகன்



**21. இயேசு தாம் கடவுளின் மகன் என்பதை எவ்வாறு காட்டினார்?**


தாம் செய்த பல புதுமைகளால் காட்டினார். எடுத்துக் காட்டாக,
தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றினார்.
நோய்களைக் குணப்படுத்தினார்.
அப்பம் பலுகச் செய்தார்.
புயலை அடக்கினார். கடல்மீது நடந்தார்.
பேய்களை ஓட்டினார்.
இறந்தவர்களுக்கு உயிர் கொடுத்தார்.
தாமும் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

**22. ஆகவே இயேசுக்கிறிஸ்து யார்?**

அவர் மெய்யாகவே கடவுளும் மனிதனுமானவர். பாவத்தில் இருந்த நம்மை மீட்பவர். கடவுளிடம் செல்ல நமக்கு வழிகாட்டுபவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11-ம் பாடம்
## இயேசுவின் மீட்புப்பணி




**23. இயேசு நம்மை எவ்வாறு மீட்டார்?**

தம் விண்ணகத் தந்தையின் விருப்பத்திற்கு முற்றிலும் பணிந்தவராய் வாழ்ந்து நமக்காகப் பாடுபட்டு சிலுவையில் மரித்து, பாவத்திற்கேற்ற பரிகாரம் செய்து, உயிர்த்தெழுந்து நமக்கு மீட்பைப் பெற்றுத் தந்தார்.


**24. சிலுவை மரணத்தோடு கிறிஸ்துவின் வாழ்வு முடிந்து விட்டதா?**

இல்லை. தாம் முன்னுரைத்தபடியே மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். இவ்வாறு சாவைக் கடந்து சென்றதையே கிறிஸ்துவின் "பாஸ்கா" என்கிறோம். உயிர்த்த நாற்பதாம் நாள் இவ்வுலகைக் கடந்து தந்தையிடம் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12-ம் பாடம்

## தூய ஆவி



**25. இயேசு பரலோகத்திற்கு எழுந்தருளிய பத்தாம் நாள் என்ன செய்தார்?**

தாம் வாக்களித்தபடி தமது திருத்தூதர்களுக்கு பிரியாத துணையாளராக தூய ஆவியை அனுப்பினார்.

**26. தூய ஆவியானவர் யார்?**

பிதாவோடும் சுதனோடும் ஒரே கடவுளாய் இருப்பவர்.


**27. தூய ஆவி நம் ஒவ்வொருவரிடத்திலும் என்ன செய்கிறார்?**

தூய ஆவி நம்முள் குடிகொண்டு நம்மைப் புனிதப் படுத்தி, தந்தையோடும் மகனோடும் இணைக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13-ம் பாடம்

## திருச்சபை



**28. திருச்சபையை ஏற்படுத்தியவர் யார்?**

திருச்சபையை ஏற்படுத்தியவர் இயேசுக்கிறிஸ்து

**29. திருச்சபைக்குத் தலைவர் யார்?**

இயேசுக்கிறிஸ்துவேதான், அவர் தம் பெயரால் திருச்சபையை நடத்துவதற்காகக் கண்கண்ட தலைவராக தூய பேதுருவை ஏற்படுத்தினார்

**30. 1. தூய பேதுருவின் வாரிசுகளாக வருபவர்கள் யாவர்?**

திருத்தந்தையர்கள்


**30. 2. திருத்தூதர்களின் வாரிசுகளாக வருபவர்கள் யார்?**

ஆயர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14-ம் பாடம்

# இயேசு உலக முடிவில் வருவார்




**31. இயேசு மீண்டும் இவ்வுலகிற்கு வருவாரா?**
அவர் உலக முடிவில் சீவியரையும் மரித்தவரையும் நடுத்தீர்க்க வருவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15-ம் பாடம்

## அருட்சாதனங்கள்



**32. அருட்சாதனங்கள் வழியாக நாம் என்ன பெறுகிறோம்?**

உயிர்த்த கிறிஸ்துவின் செயலால் அருள் உயிரைப் பெறுகின்றோம்.

**33. அருட்சாதனங்கள் யாவை?**

திருமுழுக்கு, உறுதிப்படுத்தல், நற்கருணை, ஒப்புரவு, நோயில்பூசுதல், குருத்துவம், திருமணம் ஆகிய ஏழுமே அருட்சாதனங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16-ம் பாடம்

## திருமுழுக்கு



**34. திருமுழுக்கினால் கிறிஸ்து என்ன செய்கிறார்?**
கடவுளின் அன்பு மக்களாகப் பிறக்கும் புதுப்பிறப்பை அளிக்கிறார். தெய்வீக வாழ்வில் பங்கு கொள்ள அருள் உயிரை அளிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17-ம் பாடம்

## நற்கருணை



**35. இயேசு நற்கருணையை எப்பொழுது ஏற்படுத்தினார்?**

தமது கடைசி இராவுணவின்போது ஏற்படுத்தினார்

**36. நற்கருணையை இயேசு ஏன் ஏற்படுத்தினார்?**

தம் சாவு உயிர்த்தெழுதல் இவற்றின் நினைவாக ஏற்படுத்தினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18-ம் பாடம்

# திருப்பலி



**37. திருப்பலியின் இருபெரும் பகுதிகள் யாவை?**

1. இறைவார்த்தை வழிபாடு
2. நற்கருணை வழிபாடு

**38. திருப்பலியில் சிறந்த முறையில் பங்கெடுப்பது எவ்வாறு?**

வெறும் பார்வையாளர்போல் இருக்காது திருச் சடங்குகள், செபங்கள், பாடல்கள் முதலியவற்றில் மனம் ஒன்றித்து உணர்வு பூர்வமாக செயல் முறையில் பங்கெடுக்க வேண்டும். இறைவார்த்தைக் கும் மறையுரைக்கும் ஆர்வமுடன் செவிமடுக்க வேண்டும். மேலும் தகுந்த தயாரிப்புடன் திரு விருந்தில் பங்கு கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19-ம் பாடம்

# நற்கருணை நமது ஆன்ம உணவு



**39. நற்கருணையில் கிறிஸ்து தம்மையே நமக்கு உணவாகத் தந்தது ஏன்?**

- தமது சிலுவைப்பலியை நாம் நினைவு கூரவும்
- அதன் மூலம் நாமும் எம்மை பலியாக்க கற்றுக் கொள்ளவும்
- அவரை உண்டு அவரோடு ஒன்றித்து அவரால் ஊட்டம் பெறவும் தம்மையே நமக்கு உணவாக தந்தார்

**40. நற்கருணை பெறுவோர் என்ன நிலையில் இருக்க வேண்டும்?**

சாவான பாவம் இல்லாமல், கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருக்க வேண்டும்

**41. நற்கருணை பெறுவோர் அனுசரிக்க வேண்டிய உபவாச ஒழுங்கு என்ன?**

நற்கருணை பெறுமுன் ஒரு மணி நேரம் எதுவும் உண்ணாமலும், தண்ணீர் தவிர எதையும் குடிக்காமலும் இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20-ம் பாடம்

## ஒப்புரவு



**42. பச்சாத்தாபத்தால் கிறிஸ்து நம்முள் என்ன செய்கிறார்?**

கடவுளுக்கும் மனிதனுக்கும் விரோதமாக நினைவாலும் சொல்லாலும், செயலாலும், கடமையில் தவறியதாலும் நாம் செய்த பாவங்களைக் கிறிஸ்து மன்னிக்கிறார். அன்புத் தந்தையாகிய கடவுளோடு நம்மை மீண்டும் உறவு கொள்ளச் செய்கிறார். திருச்சபை என்னும் குடும்பத்தில் அன்பின் பிணைப்பை வளர்க்கின்றார்.

**43. பாவ சங்கீர்த்தனம் செய்யும் முறை என்ன?**

- செய்த பாவங்களை நினைவுக்குக் கொண்டு வருதல்
- அவற்றிற்காக மனம் வருந்துதல்
- இனிப்பாவம் செய்வதில்லை என்று தீர்மானித்தல்
- குருவிடம் பாவங்களை அறிக்கையிடுதல்
- பாவங்களுக்காகக் குரு குறிக்கும் பரிகாரம் செய்தல்
- நாம் பாவமன்னிப்பு அடைந்துள்ளோம் என்பதைக் காட்ட நமக்குத் தீங்கு செய்தோரை நாமும் மன்னித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21-ம் பாடம்

# கிறிஸ்தவ வாழ்வின் பொது விதிகள்

**44. கிறிஸ்தவ வாழ்வின் பொதுவிதிகள் யாவை?**

1-வது: இறைவனை முழுமனதுடன் அன்புசெய்வது
2-வது: தன்னை அன்பு செய்வதுபோல எல்லா மனிதரை
யும் அன்பு செய்வது

**45. நம் அன்றாட வாழ்க்கையில் கிறிஸ்துவின் சீடர்களாக வாழ்வது எப்படி?**

கிறிஸ்துவை கண்முன் கொண்டு அவரிடம் விளங்கிய அன்பு, உண்மை, நீதி, அஞ்சாமை, கடமை உணர்வு, கற்பு முதலிய புண்ணியங்களைக் கடைப்பிடித்து வாழ்வதால்.


**46. கிறிஸ்தவ வாழ்வுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குவோர் யார்?**

கடவுளின் அன்னையாகிய தூய கன்னி மரியாளும் தூயவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22-ம் பாடம்

## பத்துக் கற்பனைகள்




**47. இறைவனுக்கு உகந்த வாழ்க்கை நடாத்த அவர் நமக்குத் தந்த கட்டளைகள் யாவை?**

**இறைவன் நமக்கு அருளிச் செய்த வேத கட்டளைகள் பத்து**

I. "நானே உன் கடவுளாகிய ஆண்டவர். என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது" (வி.ப. 20:2-3, இ.ச. 5:6-7)

II. "உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே" (வி.ப. 20:7, இ.ச. 5:11)

III. "ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு" (வி.ப. 20:8, இ.ச 5:12)

IV. "உன் தந்தையையும் உன் தாயையும் மதித்து நட" (வி.ப 20:12, இ.ச. 5:16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V. "கொலை செய்யாதே" (வி.ப 20:13, இ.ச 5:17)

VI. "விபச்சாரம் செய்யாதே" (மோகபாவம் செய்யாதே) (வி.ப. 20:14, இ.ச 5:18)

VII "களவு செய்யாதே" (வி.ப 20:15, இ.ச 5:19)

VIII. "பிறருக்கு எதிராகப் பொய்ச்சான்று சொல்லாதே" (வி.ப. 20:16, இ.ச 5:20)

IX. "பிறர் மனைவியைக் (கணவனைக்) காமுறாதே" (வி.ப. 20:17, இ.ச 5:21)

X. "பிறர்க்குரியது எதையுமே கவர்ந்திட விரும்பாதே" (வி.ப: 20:17, இ.ச 5:21)

**இந்தப் பத்துக் கட்டளைகளும் இரண்டு கட்டளைகளில் அடங்கும்.**

I. எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனை நேசிப்பாயாக.
II. தன்னைத் தானே நேசிப்பதுபோல பிறரையும் நேசிப்பாயாக.

**பத்துக்கட்டளைகள் (பாவனையில் உள்ளது)**

I. ஒரே கடவுளை முழு மனதுடனே ஆராதிப்பாயாக
II. கடவுளின் திருப்பெயரை வீணாகச் சொல்லாதிருப்பாயாக
III. கடவுளின் திருநாட்களை பரிசுத்தமாய் கொண்டாட நினைவு கூர்வாயாக.
IV. தாய் தந்தையரை மதித்து நடப்பாயாக
V. கொலை செய்யாதிருப்பாயாக
VI. மோகபாவம் செய்யாதிருப்பாயாக
VII. களவு செய்யாதிருப்பாயாக
VIII. பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக
IX. பிறர் தாரத்தை விரும்பாதிருப்பாயாக
X. பிறர் உடைமையை விரும்பாதிருப்பாயாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23-ம் பாடம்

# திருச்சபையின் முக்கிய ஒழுக்க விதிகள்




**48. திருச்சபையின் முக்கிய ஒழுக்கவிதிகள் யாவை?**

1. ஞாயிறு மற்றும் கடன் திருநாட்களில் திருப்பலியில் முழுமையாகப் பங்குபெறல், கடின உழைப்பினின்று ஓய்வெடுத்து அவற்றைப் பரிசுத்தமாய்க் கடைப்பிடிப்பது.
2. ஆண்டிற்கொருமுறையாவது தகுந்த முறையில் ஒப்புரவு அருட்சாதனத்தில் பங்கு கொள்ளல்.
3. பாஸ்கா காலத்தில் ஒருமுறையாவது திருவிருந்தில் பங்கு பெறுதல்.
4. ஒருசந்தி நாட்களில் ஒரு சந்தியும், மாமிசத்தவிர்ப்பு நாட்களில் மாமிசத்தவிர்ப்பும் அனுசரித்தல்.
5. திருமணத்தடையுள்ள உறவு முறையாரோடு திருமணம் செய்யாது இருப்பது.
6. திருச்சபையின் பணிக்கு இயன்ற உதவி செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24-ம் பாடம்

# கடவுளின் திருநாட்களை அனுசரித்தல்

**49. ஞாயிறு வாரம் ஏன் ஆண்டவரின் நாள் என்று சொல்லப்படுகிறது?**

நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து உயிர்த்தெழுந்ததும், தூய ஆவியானவர் திருத்தூதர் மேல் இறங்கி வந்ததும் ஞாயிறு வாரம் நிகழ்ந்தமையால், அந்நாள் ஆண்டவரின் நாள் என்று அழைக்கப்படுகிறது.

**50. இலங்கையில் அனுசரிக்க வேண்டிய கடன் திருநாட்கள் எவை?**

வருடத்தின் எல்லா ஞாயிறு தினங்கள்,
தூய மரியா இறைவனின் அன்னை விழா (தை 1ம் திகதி),
தூய மரியா விண்ணேற்பு விழா (ஆவணி 15),
தூய மரியா மாசில்லாமல் உற்பவம் (மார்கழி 8),
கிறிஸ்து பிறப்பு விழா (மார்கழி 25)

**51. ஞாயிறு கடன் திருநாட்களில் நாம் செய்ய வேண்டிய பக்தி முயற்சி யாவை?**

திருப்பலியில் பங்குபற்றுவது நாம் கட்டாயம் செய்ய வேண்டிய பக்தி முயற்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25-ம் பாடம்

## பாவம்




**52. கடவுளின் கற்பனைகளையும் திருச்சபையின் ஒழுக்க விதிகளையும் நாம் மீறினால் என்ன நேரும்?**

பாவம் செய்தவர்களாவோம். இதனால் கடவுளோடு கொண்டிருக்க வேண்டிய அன்புறவு பாதிக்கப்படுகிறது. சமுதாயத்தோடு கொண்டிருக்க வேண்டிய நல்லுறவும் பாதிக்கப்படலாம்.

**53. பாவத்தின் இரு பிரிவுகளும் எவை?**

அற்ப பாவம், சாவான பாவம்


கனமான காரியமோ, முழு அறிவோ, முழு சம்மதமோ இன்றிச் செய்யப்படும் பாவம் அற்ப பாவம்.

கனமான காரியத்தில் முழு அறிவோடு முழு சம்மதத்தோடு கடவுள் கட்டளையை மனமார மீறி அவரது அன்பை முறித்துக் கொள்வது சாவான பாவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26-ம் பாடம்

## செபம்



**54. நாம் எவ்வாறு செபம் செய்ய வேண்டும்?**

குழந்தை தந்தையிடம் பேசுவதுபோல, கடவுளோடு அன்புடன் உரையாட வேண்டும்.

**55. கிறிஸ்து நமக்குக் கற்றுத்தந்த செபம் எது?**

பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராட்சியம் வருக. உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல, பூலோகத்திலும் செய்யப்படுவதாக.

எங்கள் அனுதின உணவை எங்களுக்கு இன்று அளித் தருளும். எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பதுபோல எங்கள் பாவங்களை பொறுத்தருளும். எங்களைச் சோதனையில் விழவிடாதேயும். தீமையிலிருந்து எங்களை இரட்சித்தருளும், ஆமென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27-ம் பாடம்

## மனிதனின் கடைசிக் கதி

**56. கிறிஸ்தவன் சாவை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும்?**

சாவுடன் எல்லாம் முடிவடைவதில்லை விண்ணக வாழ்வின் தொடக்கமே அது. ஆகவே சாவின் மீது வெற்றி கொள்ள நம் மீட்பராகிய கிறிஸ்துவைச் சந்திக்கும் தருணமெனக் கிறிஸ்தவன் சாவை எதிர்கொள்ள வேண்டும்.

**57. சாவுக்குப் பின் நடப்பது பற்றி கிறிஸ்தவ படிப்பினை என்ன?**

தனித்தீர்வை நடக்கும். அதற்குப்பின் சிலர் தம் பாவங்களுக்காக உத்தரிக்கின்றனர். இது உத்தரிக்கும் நிலை சிலர் கடவுளை முகமுகமாகக் கண்டு மாட்சி அடைகின்றனர். இதுவே நித்திய பேரின்ப நிலை, இறைவனின் அன்பை முற்றும் புறக்கணித்தோர் நித்திய தண்டனைக்கு உள்ளாகின்றனர்; இதுவே நரகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விலை ரூபா 20/=**

புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம். 2016